கொண்டமநாயக்கன்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை திருமதி.S.வெங்கடேஸ்வரி

ந.க.எண். 3/2023 **நாள். 01 .03.2023**

பொருள்... வீட்டுமனைப்பிரிவுகள் – நாமக்கல் மாவட்டம் – சேந்தமங்கலம் வட்டாரம் – கொண்டமநாயக்கன்பட்டி ஊராட்சி சர்வே எண். 154/3B, 9A ,11–ல் 0.58 ஏக்கர் பரப்பளவில் 2347.18 சதுரமீட்டரில் " புதிய மனைப்பிரிவு ஏற்படுத்தப்பட்டது – மனைப்பிரிவினை வரன்முறை செய்திடும் பொருட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வரப்பெற்றது – மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள 1 முதல் 11 வரையிலான மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி அங்கீகாரம் வழங்கி உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை.. 1) அரசாணைஎண்.78, வீட்டுவசதிமற்றும் நகர்புற வளர்ச்சித்துறைநாள் 04.05.2017.

2) அரசாணைஎண்.172, வீட்டுவசதிமற்றும் நகர்புற வளர்ச்சித்(UDE 4(3) துறைநாள்–13.10.2017.

3) உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் , நாமக்கல் அவர்களின் கடிதம் ந.க..எண்.NKL/E36KAHXQ/4436/2022/TCP, நாள்.10.02.2023.

4) திருமதி.S.ஜெயா, க/பெ.சுந்தம், பரம்பலம்மன் கோவில் தெரு, சேந்தமங்கலம் வட்டம் , நாமக்கல் மாவட்டம் என்பவரின் விண்ணப்பம் நாள்– 24.02.2023.

✦✦✦✦✦

சேந்தமங்கலம் வட்டாரம், கொண்டமநாயக்கன்பட்டி ஊராட்சி சர்வே எண். 154/3B, 9A ,11–ல் 0.58 ஏக்கர் பரப்பளவில் 2347.18 சதுரமீட்டரில் புதிய மனைப்பிரிவில் வீட்டுமனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பார்வை (1) மற்றும் (2)–ல் காணும் அரசாணைகளில் அங்கீகாரம் இல்லாத மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்திக் கொள்ளவழிகாட்டி நெறிமுறைகள் வழங்கப்பட்டதை தொடர்ந்து பார்வை3–ல் காணும் கடிதம் மூலம் உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களால் ஒருசில நிபந்தனைகளின்படி அனுமதியற்ற மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்த தொழில்நுட்ப ஒப்புதல் ம.வ/ந.ஊ(நாமா) எண்.41/2023–ன் படி வழங்கப்பட்டுள்ளது.

2) வீட்டுமனையிடங்களாக பிரிக்கப்பட்ட சர்வே எண். 154/3B, 9A ,11––ல் உள்ள மனைகளுக்கு அங்கீகாரம் வழங்குமாறு திருமதி. S.ஜெயா என்பவர் பார்வை 4–ல் காணுமாறு விண்ணப்பித்துள்ளார். எனவே பார்வை 4ல் காணும் கடிதத்தில் கோரியுள்ளவாறு சர்வே எண். 154/3B, 9A ,11– ல் அமைந்துள்ள வீட்டுமனை எண்கள்.1 முதல் 11 வரையிலான மனைப்பிரிவுகளை வரன்முறை செய்யும் பொருட்டு கூராய்வு கட்டணம் ரூ.11000/–ம் மேலும் 2347.18 சதுர மீட்டருக்கு நில மதிப்பு மற்றும் நில மாற்ற கட்டணம் ரூ.1287/–ம் செலுத்திட தெரிவிக்கப்பட்டது.

3) இதனையடுத்து, கூராய்வு கட்டணம் ரூ.11000/––ஐ .03.2023 –ல் கொண்டமநாயக்கன்பட்டி ஊராட்சி கணக்கில் செலுத்தியும், நில மதிப்பு மற்றும் நில மாற்ற கட்டணம் ரூ.1287/–ஐ கொண்டமநாயக்கன்பட்டி ஊராட்சி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே சர்வே எண். 154/3B, 9A ,11–ல் அமைந்துள்ள வீட்டுமனை எண்கள்– 1 முதல் 11 வரையிலான மனைப்பிரிவிற்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. வரன்முறை செய்து வழங்கப்படும் இம்மனை வீடுமட்டும் கட்டுவதற்கு பயன்படுத்தவேண்டும். அபாயகரமான மற்றும் அருவருக்கதக்க தொழிற்சாலைகள் ஏதும் ஏற்படுத்திட அனுமதியில்லை.
2. மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விகிதங்களில் வேறுபாடுகள் ஏதுமிருந்து, கட்டணம் செலுத்தவேண்டியிருப்பது, ஏதேனும் பின்னர் கண்டறியப்படின் அதனைமனுதாரர் செலுத்தவேண்டும்.
3. அரசின் கொள்கைஅளவிலானமனைப்பிரிவு அங்கீகாரத்தில் அரசுமாற்றங்கள் எதேனும் செய்து உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டால் அந்த உத்தரவுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவராவர்.
4. பத்திரபதிவுகள் மற்றும் நில உடமைமாற்றங்களில் ஏற்படுத்தப்படும் சிவில் வழக்குகளுக்கு மனுதாரரே முழு பொறுப்பாவார்.

மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறினால் இந்தமனைக்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் ரத்து செய்திடஏதுவாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

S.வெங்கடேஸ்வரன்

தலைவர்,
ஊரக வளர்ச்சி முகமை,
கொண்டமநாயக்கன்பட்டி ஊராட்சி .
சேந்தமங்கலம் ஒன்றியம்.

பெறுநர்– திருமதி.S.ஜெயா,
க/பெ.சுந்தம்,
பரம்பலம்மன் கோவில் தெரு,
சேந்தமங்கலம் வட்டம் ,
நாமக்கல் மாவட்டம்.

நகல்–

1) வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), சேந்தமங்கலம்.
2) சார்பதிவாளர், சேந்தமங்கலம்.
3) தாசில்தார், சேந்தமங்கலம்